moe KINDERGARTEN




# வலுவான அடித்தளத்தை நோக்கி!

# எங்கள் நம்பிக்கை



## கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளில், பிள்ளைகள் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் செயல்திறனுடன் கற்பவர்கள் என நாங்கள் நம்புகிறோம்.



### பிள்ளைகள் ஆர்வத்துடன் கற்பவர்கள்.

அவர்களிடம் இயல்பாகவே உள்ள ஆர்வத்தைப் பேணி வளர்க்க வேண்டும். அவர்கள் புதியவற்றை அறிந்துகொள்ள அவாக்கொண்டு கேள்விகள் எழுப்பி, முயன்று பார்த்து, பலவற்றைத் தெரிந்துகொள்வதால் தம் உலகத்தை அர்த்தமுடையதாக்கிக் கொள்கின்றனர். இந்த ஆர்வமே அவர்கள் தொடர்ந்து ஆராய்ந்து அதிகமாகக் கற்றுக்கொள்ள வழிவகுக்கிறது.



### பிள்ளைகள் ஈடுபாட்டுடன் கற்பவர்கள்.

அவர்கள் எதையும் செய்து பார்ப்பதன் மூலம் கற்கிறார்கள். இயல்பான வாழ்க்கைச் சூழலில் பங்கேற்றல், ஆராய்தல், செய்துபார்த்தல் ஆகியவற்றின்மூலம் திறன்களையும் கருத்துகளையும் புரிந்துகொள்வதோடு அவற்றை அவர்கள் நினைவிலும் நிறுத்திக்கொள்கிறார்கள்.

### பிள்ளைகள் செயல்திறனுடன் கற்பவர்கள்.

அவர்கள் ஏற்கனவே பெற்றிருக்கும் அறிவாற்றல் அனுபவங்கள் ஆகியவற்றோடு புதிய அறிவாற்றலைப் பெறும்போது அவர்களின் சிந்திக்கும் திறனும் காரணகாரியத்தொடர்புத் திறனும் படிப்படியாக மேம்படுகின்றன. பிள்ளைகள் தங்கள் கற்றுக்கொண்டவற்றைப்பற்றித் தொடர்ந்து சிந்திப்பதாலும் சிந்தனைமீட்சி செய்வதாலும் உலக நடப்பியலை ஆழமாகப் புரிந்துகொள்கின்றனர்.



## ஒவ்வொரு பிள்ளைக்கும் வலுவான அடித்தளத்தை அமைத்துத் தருவதே எங்கள் தொலைநோக்காகும். சிங்கப்பூரர்களுக்குக் கட்டுப்படியான கட்டணத்தில் தரமான பாலர் கல்வியை வழங்குவதன் வாயிலாகவும் மற்றப் பாலர் பள்ளிப் பிரிவில் தரமான கல்வி மேம்பாட்டினை ஊக்கப்படுத்துவதன் வாயிலாகவும் இந்நோக்கத்தை நிறைவேற்ற விழைகிறோம்.

பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சியை நாங்கள் பேணி வளர்ப்பதால் அவர்கள் தன்னம்பிக்கை உடையவர்களாகவும் நல்ல சமூகத் திறன்கொண்டவர்களாகவும் அடிப்படை மொழி, கணிதத் திறன்கள் படைத்தவர்களாகவும் உருவாகிறார்கள்.

நமது பாலர் பள்ளிப் பாடக்கலைத்திட்டம் கல்வி அமைச்சின் பாடத்திட்டச் சிறப்பாய்வாளர்களால் இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் பணிச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடக்கலைத்திட்டம் சிங்கப்பூரில் பாலர் பள்ளித் திட்டங்களின் மேம்பாட்டிற்கு வழிகாட்டியாக அமைகிறது.

ஹைலைட் திட்டமும் ஸ்டார்லைட் எழுத்தறிவுத் திட்டமும் கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளுக்குரிய இரு முக்கியத் திட்டங்களாகும். இவற்றின்கீழ் உங்கள் பிள்ளைகள் தங்களின் கல்விப் பயணத்தை உற்சாகமாக மேற்கொள்வர்.

# ஹை-லைட் திட்டம்

## ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறை வாயிலாக முழுமையான வளர்ச்சி

ஹை-லைட் திட்டம் (Hi-Light Programme) ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறையின்மூலம் பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கிறது. இது பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் கற்கத் தூண்டுகிறது.

பிள்ளைகள் தாங்கள் கற்றதைத் தனித்தனியாகப் பார்க்காமல், தங்கள் அனுபவங்களிலிருந்து முழுமையாகக் கற்றுக்கொள்கிறார்கள். இதனாலேயே பிள்ளைகள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக ஹை-லைட் திட்டத்தின் கற்றல் அனுபவங்கள் முழுமையான வகையில் திட்டமிடப்பட்டுள்ளன.

ஹை-லைட் திட்டத்தின்வழிப் பிள்ளைகளின் கற்றல் கீழ்க்காணும் ஆறு கற்றல் பிரிவுகளின்மூலம் முழுமையாக வளர்க்கப்படும்:



- அழகியல் மற்றும் படைப்பாக்கத்திறன் வெளிப்பாடு
- உலகைத் தெரிந்துகொள்ளுதல்
- மொழித்திறனும் எழுத்தறிவும்
- தசைநார் இயக்கத்திறன் வளர்ச்சி
- கணிதத்திறன்
- சமூக மனவுணர்வு சார்ந்த வளர்ச்சி

# ஸ்டார்லைட் எழுத்தறிவு திட்டம்

## இளம் பருவத்திலேயே இருமொழிக் கல்வியைப் பேணி வளர்த்தல்







ஸ்டார்லைட் எழுத்தறிவுத் திட்டம் (Starlight Literacy Programme) இருமொழிக் கல்வியை இளம் பருவத்திலேயே பேணி வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் ஆங்கிலத்திலும் மூன்று தாய்மொழிகளிலும் வழங்கப்படுகிறது. பிள்ளைகள் ஆங்கிலத்தையும் தமது தாய்மொழியையும் மகிழ்ச்சியுடன் கற்கவும் தன்னம்பிக்கையுடன் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடவும் நம் மரபையும் பழக்க வழக்கங்களையும் அறிந்துகொள்ளவும் இது வாய்ப்பு அளிக்கிறது.

சிங்கப்பூர்ச் சூழலுக்கு ஏற்ப பெரிய புத்தகங்கள், பாடல்கள், மொழி விளையாட்டுகள் போன்ற பலவகையான வளங்களின்மூலம் பிள்ளைகளின் மொழிக் கற்றல் மகிழ்ச்சிமிக்கதாக அமைகிறது. மேலும், குடும்ப உறுப்பினர்கள் பிள்ளைகளின் கற்றலில் ஈடுபடும்வண்ணம் குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து செய்யக்கூடிய நடவடிக்கைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்மூலம் பிள்ளைகள் கேட்டல், பேசுதல் திறன்களில் தகுந்த தேர்ச்சியினையும் படித்தல், எழுதுதல் திறன்களில் ஆயத்த நிலையினையும் பெறுவர். இது பிள்ளைகளின் எதிர்கால மொழிக் கற்றலுக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துத் தர உதவும்.

# கல்வி அமைச்சின் பாலர் பள்ளி அனுபவம்



## நான்கு கருப்பொருள்களை மையமாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளின்மூலம் கற்றல்

கல்வி அமைச்சின் பாலர் பள்ளியில் பயிலும் உங்கள் பிள்ளை, பின்வரும் கருப்பொருள்களை மையமாகக்கொண்டு அமைக்கப்பட்ட நடவடிக்கைகளின்மூலம் கற்பார்:

- நான் யார்?
- என்னைச் சுற்றியுள்ளவர்கள் யார்? என்னைச் சுற்றியுள்ள இடங்கள் யாவை?
- நான் யாருடன் இந்த உலகத்தைப் பகிர்ந்துகொள்கிறேன்?
- பொருள்கள் எவ்வாறு இயங்கும்?

ஒவ்வொரு கருப்பொருளும் பிள்ளைகளுக்கு நன்கு தெரிந்த தலைப்புகளை உள்ளடக்கியதாக இருக்கும். இந்த அணுகுமுறை பிள்ளைகள் முதலில் தம்மைப்பற்றியும் அடுத்துத் தம் நண்பர்களைப்பற்றியும் அதற்கடுத்துச் சிங்கப்பூரிலுள்ள மக்கள், இடங்கள்பற்றியும் இறுதியாக, உலகைப்பற்றியும் ஆராய்ந்து அறிய உதவுகிறது.

## அர்த்தமுள்ள விளையாட்டின்மூலமும் தரமான கருத்துப்பரிமாற்றத்தின்மூலமும் கற்றல்

உங்கள் பிள்ளைகள் திட்டமிடப்பட்ட மகிழ்ச்சிகரமான விளையாட்டு அனுபவங்கள்வழியும் ஆசிரியர்களின் வழிகாட்டுதல்வழியும் கற்றல் குறிக்கோள்களை அடைகின்றனர். இம்மகிழ்ச்சிகரமான விளையாட்டு அனுபவங்கள்வழி, தங்கள் எண்ணங்களையும், கருத்துகளையும் மேம்படுத்திக்கொள்வதற்காக அவர்கள் ஆசிரியர்களுடனும் நண்பர்களுடனும் உற்சாகமான கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றனர்.

## தனிச்சிறப்பு வாய்ந்த சிங்கப்பூர் மண்வாசனையுடன் கூடிய நடைமுறைக்கேற்ற கற்றல் சூழல்

உங்கள் பிள்ளை அவரைச் சுற்றியுள்ள மக்கள், இடங்கள், விழாக்கள், மரபுகள், உள்ளூர் உணவுவகைகள் முதலியவற்றைப்பற்றிக் கற்றுக்கொள்வார். இது உங்கள் பிள்ளையின் கற்றலை நடைமுறைக்கு ஏற்றதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும்படி செய்யும்.

---

## அதிசய வாரத் திட்டப் பணிகள்மூலம் (Weeks of Wonder (Wow) projects) ஆழக் கற்றல்

பிள்ளைகள் ஆழமாகக் கற்பதற்காக ஒவ்வொரு தவணையிலும் அதிசய வாரத் திட்டப்பணிகள் நடத்தப்படுகின்றன. பிள்ளைகள் தம் சக நண்பர்களோடும் ஆசிரியர்களோடும் இணைந்து தமக்குப் பிடித்த ஒரு தலைப்பைப்பற்றி ஆழமாக ஆராய்வர். இத்திட்டத்தின்வழிப் பிள்ளைகள் சுயகற்றலின் இன்பத்தை அனுபவிப்பதோடு தங்களின் கேள்விகளுக்கும் விடை காண்பர். இந்த அனுபவங்கள் உங்கள் பிள்ளையின் தன்னம்பிக்கையை வளர்ப்பதோடு கற்றலின்மீதான அவரின் ஈடுபாட்டையும் வளப்படுத்தும். இந்த அனுபவங்கள் பின்வருவனற்றை நிறைவேற்ற முயல்கின்றன:

- விருப்பமான தலைப்பு ஒன்றைப்பற்றி மற்றவருடன் இணைந்து ஆராயும்போது பிள்ளைகளை உடனிணைந்து செயலாற்ற ஊக்குவித்தல்.
- பல்வேறு மூலங்களிலிருந்து தகவல்களைத் திரட்டுவதன்வழியும் தங்களது கண்டுபிடிப்புகளை மற்றவரோடு பகிர்ந்துகொள்வதன்வழியும் பிள்ளைகளின் செயல்முறைத் திறன்களை வளர்த்தல்;
- அதிசய வாரத் திட்டப் பணிகளை ஆங்கிலத்திலும் தாய்மொழிகளிலும் மேற்கொள்வதன்வழி பிள்ளைகளின் கருத்துப் பரிமாற்றத்திறனை மேம்படுத்துதல்.





# குடும்பங்களுடனும் சமூகத்துடனும் வலுவான பங்காளித்துவம்

கல்வி என்பது பிள்ளைக்குக் கற்றுக்கொடுப்பதற்கு அப்பாலும் செயல்படுகிறது என்பது எங்கள் நம்பிக்கை. குடும்பங்களுடனும் சமூகத்துடனும் வலுவான பங்காளித்துவத்தை வளர்த்துக்கொள்வதன்மூலம் பிள்ளைகளின் கற்றல் அனுபவங்களை வளப்படுத்த நாங்கள் முயல்கிறோம். இளம் மாணவர்கள் உள்ள குடும்பங்களை வழிநடத்தி ஊக்குவிக்கும் (LIFE@MK) பயிலரங்குகள்வழியும், குடும்பம் சார்ந்த நடவடிக்கைகள்வழியும் பிள்ளைகளின் கற்றலில் நாங்கள் குடும்பங்களை ஈடுபடுத்துகிறோம்.

பயன்முனைப்புமிக்க கருத்துப்பரிமாற்றம், துடிப்புமிக்க ஈடுபாடு, அர்த்தமுள்ள கூட்டுமுயற்சி ஆகியவற்றின்வழி, உங்கள் பிள்ளையின் முழுமையான வளர்ச்சியை ஆதரிப்பதற்காக உங்களுடன் நாங்கள் நெருங்கிச் செயல்படுவதன்மூலம் பிள்ளைக்கு வலுவான கற்றல் அடித்தளம் அமைவதை உறுதிசெய்கிறோம்.



# தொடக்கநிலை 1-இல் சீரான நிலைமாற்றம் பெறுவதற்கு உதவும் வகையில் தொடக்கப்பள்ளிகளுடன் அணுக்கமாக உடனிணைந்து செயலாற்றுதல்







தொடக்கப்பள்ளிகளுடன் நாங்கள் அணுக்கமாக உடனிணைந்து செயலாற்றுகிறோம். இது பிள்ளைகளின் கற்றல் அனுபவத்தை வளப்படுத்தி அவர்கள் பாலர் பள்ளியிலிருந்து தொடக்கநிலை 1-க்குச் சீரான நிலைமாற்றம் பெறுவதற்குத் தகுந்த ஆதரவை அளிக்கிறது. உங்கள் பிள்ளை தொடக்கப்பள்ளி மாணவர்களுடன் கூட்டு நடவடிக்கைகளின்போது கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவார். இதன்மூலம் அவர்கள் தங்களது மூத்த நண்பர்களிடமிருந்து கற்றுக்கொள்வார்.

பாலர் பள்ளியிலிருந்து தொடக்கப்பள்ளிக்குச் செல்லும் உங்கள் பிள்ளையிடம் தொடர் கற்றலை ஊக்குவிக்க, எங்களது பாடக்கலைத்திட்டம் ஐந்து வார அனுபவக் கற்றல் என்னும் பாடப்பகுதியை வழங்குகிறது. இது தொடக்கப்பள்ளி மாணவரின் அனுபவங்களை அறிந்துகொள்ளவும் தொடக்கநிலை ஒன்றில் தாங்கள் எதிர்நோக்கக்கூடிய மாற்றங்களுக்குத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளவும் உங்கள் பிள்ளைக்கு உதவும்.

பிள்ளையின் கற்றலைப்பற்றியும் வளர்ச்சியைப்பற்றியும் பொதுவான நல்ல புரிந்துணர்வு வேண்டும் என்பதனால் நாங்கள் கீழ்த்தொடக்கநிலை ஆசிரியர்களுடன் இணைந்து செயல்படுகிறோம். இதன்மூலம் தொடக்கப்பள்ளி ஒன்றுக்குச் செல்லும் உங்கள் பிள்ளையின் கற்றலை அக்கல்வியாளர்கள் மேலும் வலுப்பெறச் செய்ய முடியும்.

# பாலர் பள்ளி பராமரிப்புச் சேவை (Kindergarten Care)

கல்வி அமைச்சின் பாலர் பள்ளி நான்கு மணி நேரத் திட்டத்தை வழங்குகிறது. தங்கள் பிள்ளைகளுக்கு முழு நாள் பராமரிப்புச் சேவை தேவைப்படும் பெற்றோர்கள், கல்வி அமைச்சின் வழிகாட்டுதல்படி கல்வி அமைச்சால் பணியமர்த்தப்பட்டுள்ள சேவை வழங்குநர்களை அணுகலாம்.



பாலர் பள்ளி பராமரிப்புச் சேவை, கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வளங்களுடன்கூடிய சிறப்பாக வடிவமைக்கப்பட்டச் சூழலில் இளம் பிள்ளைகள் விளையாடவும் ஆராயவும் கண்டுபிடிப்புகளில் ஈடுபடவும் பொருத்தமான நேரத்தையும் இடத்தையும் ஏற்படுத்தித் தருகிறது. உங்கள் பிள்ளை பல்வேறு விளையாட்டு அனுபவங்களைப் பெறுவதோடு பலதரப்பட்ட நாட்டங்களுக்கு ஏற்ப அனுபவம் பெறுவர்.





பாலர் பள்ளி பராமரிப்புச் சேவை பின்வரும் வாய்ப்புகளைப் பிள்ளைகளுக்கு வழங்குகிறது.

- உட்புற, வெளிபுற விளையாட்டில் ஈடுபடுதல்
- நண்பர்களுடன் விளையாடவும் சமூகத்தினருடன் பேசிப் பழகவும் செய்தல்
- தங்களைச் சுற்றியுள்ள உலகைப்பற்றி ஆராய்ந்தறிதல்

# திட்டத்திற்குரிய தகுதிநிலை

| திட்டம் | தகுதிநிலை |
|---|---|
| பாலர் பள்ளி முதலாம் ஆண்டு (K1) | சேர்க்கை ஆண்டின்போது 5 வயதை அடையும் பிள்ளை |
| பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு (K2) | சேர்க்கை ஆண்டின்போது 6 வயதை அடையும் பிள்ளை |
| பாலர் பள்ளி பராமரிப்புச் சேவை (KCare) | கல்வி அமைச்சின் பாலர் பள்ளியில் சேர்ந்துள்ள பிள்ளைகள் |

# திட்டத்திற்குரிய மணி நேரம்

| பாலர் பள்ளி முதலாம் ஆண்டு, பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு (4 மணி நேரத் திட்டம்) | |
|---|---|
| காலை நேரம் | காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை |
| பிற்பகல் நேரம் | பிற்பகல் 1 மணிமுதல் மாலை 5 மணிவரை |

கல்வி அமைச்சின் பாலர் பள்ளி, கல்வி அமைச்சின் பள்ளித் தவணைகளையும், பள்ளி விடுமுறை நாள்களையும் பின்பற்றுகிறது.

| பாலர் பள்ளி முதலாம் ஆண்டு, பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு (முழு நேரத் திட்டம் மற்றும் பாலர் பள்ளிப் பராமரிப்புத் திட்டம்) | |
|---|---|
| கல்வி அமைச்சின் காலை நேரப் பாலர் பள்ளி வகுப்புகளுக்குச் செல்லும் முதலாம், இரண்டாம் ஆண்டு பிள்ளைகள் | காலை 7 மணிமுதல் காலை 8 மணிவரை (KCare)<br>காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை (MK)<br>நண்பகல் 12 மணிமுதல் - இரவு 7 மணிவரை (KCare) |
| கல்வி அமைச்சின் பிற்பகல் நேரப் பாலர் பள்ளி வகுப்புகளுக்குச் செல்லும் முதலாம், இரண்டாம் ஆண்டு பிள்ளைகள் | காலை 7 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை (KCare)<br>பிற்பகல் 1 மணிமுதல் - மாலை 5 மணிவரை (MK)<br>மாலை 5 மணிமுதல் - இரவு 7 மணிவரை (KCare) |

பாலர் பள்ளிப் பராமரிப்புச் சேவை, பள்ளி விடுமுறை நாள்கள் உட்பட திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை செயற்படும். அரசிதழில் பதிவு செய்யப்பட்ட பொது விடுமுறை நாள்களோடு மேலும் 6 நாள்களுக்குப் பாலர் பள்ளிப் பராமரிப்பு நிலையங்கள் மூடப்படும். கல்வி அமைச்சின் பாலர் பள்ளியும் பாலர் பராமரிப்புச் சேவை நிலையமும் முடிந்தவரை ஒருங்கிணைந்த தேதிகளிலேயே மூடப்படும்.



# பாராட்டுகளும் நற்சான்றிதழ்களும்

என் மகள் தொடக்கப்பள்ளியில் மகிழ்ச்சியாக இருக்கிறாள். கல்வி அமைச்சின் பாலர் பள்ளி, அவள் தொடக்கநிலை 1-இல் சீரான நிலைமாற்றம் பெருவதற்கு நல்ல அடித்தளத்தை இட்டிருக்கிறது. நன்றி

**Abirami Manickam-தின் பெற்றோர்**
கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (ஃபரண்ட்டியர்)

தொடக்கப்பள்ளியில் மிகேல் தன்னைச் சிறப்பாகப் பொருத்திக்கொண்டுவிட்டார். கல்வி அமைச்சின் பாலர் பள்ளி மிகேலை இதற்கு நன்கு தயார்படுத்தியுள்ளது. மேலும், பிள்ளைகளுக்காக வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டம், ஆசிரியர்கள், அனுபவம் முதலியவை இதற்குத் துணைபுரிந்தன என்று நான் நம்புகிறேன். தரமான ஆசிரியர்களும் அவர்களது அர்ப்பணிப்பும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்று நாங்கள் நம்புகிறோம்.

**Ramos Jaime Miguel Ranada-வின் பெற்றோர்**
கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (பிளாங்கா ரைஸ்)

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் செக் மிகவும் தற்சார்புடையவராக வளர்ந்திருக்கிறார். எடுத்துக்காட்டாக, அவர் ஓவியம் வரையவோ கைவினைப்பொருள் செய்யவோ விரும்பினால் அதற்குத் தேவையான பொருள்கள் யாவை; அதை செய்வதற்குத் தேவையான படிநிலைகள் யாவை என்பதைத் தெரிந்துவைத்திருக்கிறார். அதிசய வார நடவடிக்கைகள் அவரது தன்னம்பிக்கையையும் தற்சார்புடையவராகச் செயலாற்றும் தன்மையையும் வளர்ந்திருக்கிறது என்பதைக் கண்டு வியக்கிறேன்.

Zac-இன் பெற்றோர்
கல்வி அமைச்சின் பாலர் பள்ளி
(பொங்கோல் கோவ்)

சன் யிக், முன்பு அமைதியானவராகவும் கூச்ச சுபாவமுடையவராகவும் தனித்திருப்பவராகவும் திகழ்ந்தார். கல்வி அமைச்சின் பாலர் பள்ளியில் சேர்ந்ததிலிருந்து அவர் முதிர்ச்சி பெற்றிருக்கிறார். அவர் இப்போது மகிழ்ச்சி, தன்னம்பிக்கை, வெளிப்படையாகக் பேசும் திறன்கொண்ட சிறுவனாக வளர்ந்திருக்கிறார். ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்கும் இனிய பாடல்களை அவர் வீட்டில் பாடுவது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. சீனமொழியில் அவரது ஆற்றல் வெகுவாக மேம்பட்டிருக்கிறது. அர்ப்பணிப்புமிக்க ஊழியர்கள் இருக்கும் கல்வி அமைச்சின் பாலர் பள்ளியின் ஆதரவான சூழலில் பேணப்படும் வாய்ப்பைச் சன் யிக் பெற்றிருக்கிறார் என்பதனை நாங்கள் நன்றியுணர்வோடு குறிப்பிடுகிறோம். மிக்க நன்றி!

Chan Yik-இன் பெற்றோர்
கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (ஃபேரர் பார்க்)

## நன்றி

“நான் பல பிள்ளைகளைக் கவனித்துகொள்ள வேண்டும். அதனால், என்னால் ஒவ்வொரு பிள்ளையின் தேவையையும் கருத்தில்கொள்ள இயலாது.” என்று கல்வி அமைச்சின் பாலர் பள்ளி ஆசிரியர்கள் ஒருபோதும் சொன்னதில்லை. இங்கு மிகச் சிறந்த ஆசிரியர்கள் உள்ளனர். என் பிள்ளை கூச்ச சுபாவம் உள்ளவர். இருப்பினும், அவரது ஆசிரியர் அவரைத் தொடர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறார். ஆசிரியர்கள் தமது பணியை நேசிக்கின்றனர்; ஊக்கத்துடன் பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்றனர். நான் என் மகனை இந்தப் பள்ளியில் சேர்த்ததை எண்ணி மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்.

**Muhammad Al'Firdausii Irfan Bin Muhammad Ridhauddin-னின் பெற்றோர்**
கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (தாச்சொங்)

கல்வி அமைச்சு



6872 2220

www.moe.gov.sg/mk

ஜனவரி 2021 இல் அச்சிடப்பட்டது